முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 982

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.06.2022, செவ்வாய்கிழமை

1. தர்மவேலி கொண்ட அரங்கனே
தவசியாய் வாழும் தேசிகனே
வறுமை விரட்டி உலக மக்களை காக்க
வள்ளலாக வந்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி தன்னை
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 24 ம் நாள், 07.06.2022 வெவ்வாய்கிழமை)
வரமென உன்னுள் யானே இருக்க
வையகத்தார் உன்னை வணங்கிவந்தால் போதும்
3. போதுமப்பா அவர்களெல்லாம் ஞானவான்களாகி
புண்ணிய உலகத்தை படைக்க நேரும்
ஆதரவாய் உன் தர்மவழிகளை
ஆதரித்து தர்மம் செய்தால் போதும்
4. போதுமப்பா அவர்களெல்லாம் தர்மவான்களாகி
பூவுலகில் ஞானிகளாகும் வாய்ப்புப் பெறுவர்
ஆற்றல்பட உன்வழியே ஞானத்தை
அகிலத்தை மாற்றும் உயர்ஞானமாக வகுத்துத் தந்துள்ளேன்
5. உள்ளபடி அரங்கனை எண்ணினால் போதும்
உலகோர்க்கு மாற்றம் சடுதி காணும்
வல்லமைபட உன் தர்மத்தை ஏற்றால் போதும்
வையகமே மாற்றம் சடுதி காணும்
6. காணவே அரங்கன் செய்து வருகின்ற ஞானிகள் பூஜை
கலியுகத்தையே மீட்டு ஞானயுகமாக்கும்
வானவர்கள் போற்றுகின்ற வள்ளலாய் விளங்கும் அரங்கன்
வையகத்தைக் காக்க வந்த மாதர்மவானாக
7. ஆகவே அரங்கன் சொல் செயல்கள் அனைத்தும்
ஆற்றலாக உலகம் எங்கிலும் பரவ
மாற்றம் சடுதி கண்டுஇந்த பேருலகம்
மக்களை எல்லாம் காக்கும் ஞானலோகமாக மாறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–